25th March 1959]

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes.

(b) The Government have granted remission of 50 per cent of assessment in respect of all dry lands with an outturn of six annas and less, excluding lands in which wet or irrigated crops were raised and harvested successfully with the aid of well water. The question of giving up the collection of small savings from the affected agriculturists does not arise as the investments under that scheme by the agriculturists are purely voluntary. 8-50 a.m.

SRI S. M. ANNAMALAI : இந்தக் கள்ளக்குறிச்சி தாலூகா மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே 50 சதம் ரெவின்யூ வஜா கொடுக்கப்பட்டிருக்கிறது. அது பூராவும் தள்ளிக்கொடுக்க வேண்டும் என்பது மக்களுடைய விருப்பமாக இருக்கிறது. ஆகவே அரசாங்கம் உடனடியாக பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மக்களின் விருப்பம் எப்படியோ இருக்கக்கூடும். ஆனால் அங்குயிருக்கக்கூடிய நிலைமையை அனுசரித்து எந்த வகையில் சலுகை கொடுக்கவேண்டுமோ அந்த வகையிலே கொடுக்கப்பட்டு வருகிறது. நஞ்சை நிலத்திற்கு சாதாரண வஜா கொடுக்கும் உரிமை கலெக்டரிடம் இருக்கிறது. ஆகவே அவரே அதைக் கொடுக்கலாம்.

### *Harijan hostels in Tirunelveli* District

* 994 Q.—SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) நெல்லை ஜில்லாவில், வெல்பேர் ஆபீஸரால் நடத்தப்படும் சர்க்கார் உணவு விடுதிகளில் சமையல்காரர்களின் சம்பளம் என்ன ?

(ஆ) ஹரிஜன ஹாஸ்டலிலுள்ள சமையல்காரர்களின் சம்பளம் என்ன ?

(இ) இதில் வித்தியாசம் உள்ளதா ? அப்படியானால், என்ன காரணம் ?

THE HON. SRI P. KAKKAN : (a) The pay of cooks in Government Harijan Hostels in Tirunelveli district is as follows :—

| Name of the Hostal. (1) | Pay of the Cooks. (2) |
|---|---|
| (1) Government Girl's Hostel, Palayamoottai. | Rs. 20 per mensem each with free meals for ten months and Rs. 30 per mensem without meals for 2 months. |
| (2) Government Kasturibai Girls' Hostel, Tuticorin. | Do. |
| (3) Government Harijan Boys' Hostel, Mangalapuram. | Do. |
| (4) Government College Boys' Hostel, Palayamkotti. | Rs. 25 per mensem each with free meals for ten months and at Rs. 35 per mensem for two months without meals. |
| (5) Government High School Boys' Hostel, Palayamkottai. | Rs. 23 per mensem each with free meals for months and Rs. 33 per mensem for two months without meals. |

| Name of the Hostel. (1) | Pay of the Cooks. (2) |
|---|---|
| (6) Government Harijan Boy's Hostel, Krishnapuram. | Rs. 23 per mensem each with free meals for ten months and Rs. 33 per mensem for two months without meals. |
| (7) Government Harijan Boys' Hostel, Kallidaikurichi. | Do. |
| (8) Government Harijan Boys' Hostel, Puliangudi. | Do. |

(*b*) The hon. Member presumably refers to subsidised hostels. No information is available.

(*c*) The Government have recently fixed uniform rates of pay for cooks and assistant cooks in Government Harijan Hostels with effect from 1959–60. The Government do not fix the pay of the cooks in subsidised hostels.

SRI A. VEDARATHNAM : இந்த ஹாஸ்டல்களிலே வார்டன்கள் தனியாக இருக்கிறார்களா ? அவர்கள் கௌரவ ஊழியர்கள் ஆதலால் அவர்களுக்குச் சம்பளம் உண்டா ? அப்படியானால் அவர்களுக்கு என்ன சம்பளம் ?

THE HON SRI P. KAKKAN : ஹாஸ்டல்களில் எல்லோருக்கும் சம்பளம் உண்டு.

*Paramakudi Taluk Headquarters Hospital*

* 995 Q.—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the selection of site for the Taluk Headquarters Hospital at Paramakudi in Ramanathapuram district has been finalised; and

(*b*) if so, the probable date by which the work will be commenced?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Not yet, Sir.

(*b*) The work will commence as soon as the site is selected.

*Inland Water Transport Committee*

* 996 Q.—SRI A. VEDARATHNAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) மத்திய சர்க்கார் நியமித்த நீர் மார்க்க கமிஷன் (**waterways commission**) சமர்ப்பித்த ரிபோர்ட்டில் இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் எந்தெந்த மார்க்கங்களை எடுத்துக்கொள்ள சிபாரிசு செய்திருக்கிறார்கள் ?

(ஆ) அதன் பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The final report of the Inland Water Transport Committee has not yet been received by this Government.

(*b*) Does not arise.

SRI S. PAKKIRISAMI PILLAI : கூவம் நதியிலே இந்த மாதிரி தண்ணீரைப் புதுப்பித்து போக்குவரத்து ஏற்பாடு செய்வதற்கு திட்டங்கள் ஏதாவது சமர்ப்பித்திருக்கிறார்களா?